





**மினி டைடல் பூங்காக்கள் : தமிழ்நாட்டில் மேலும் வேலை வாய்ப்புகளை விரிவடையச் செய்யும்!**

# தமிழ்நாட்டின் வளர்ச்சிச் சரிதம் பல்கிப் பெருகுகிறது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**தூத்துக்குடி, டிச. 31 -**

**தூத்துக்குடியில் நேற்று முன்தினம், ‘மினி டைடல் பூங்கா’வைத் திறந்து வைத்து, சமூக வலைதளங்களில் பதிவிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “தமிழ் நாட்டில் திறக்கப்படும் ‘மினி டைடல் பூங்கா’க்கள், தமிழ் நாட்டில் மேலும் வேலைவாய்ப்புகளை விரிவடையச் செய்யும்” என்றும், “தமிழ்நாட்டில் வளர்ச்சிச் சரிதம் பல்கிப் பெருகுகிறது” என்றும் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.**

தூத்துக்குடி மினி டைடல் பூங்காவைத் திறந்து வைத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

தென் தமிழ்நாட்டின் முதல் டைடல் பூங்காவாக அமைந்துள்ள தூத்துக்குடி டைடல் பூங்கா அப்பகுதியில் வாய்ப்புகளுக்கான புதிய அத்தியாயத்தைத் தொடங்கி வைத்து, இளம் திறனாளர்களுக்குப் புதிய வாசலைத் திறந்து விட்டுள்ளது. பட்டாபிராமில் திறந்து வைக்கப்பட்ட டைடல் பூங்கா, விழுப்புரம், தஞ்சாவூர், சேலம் மற்றும் தூத்துகுடியில் திறந்து வைக்கப்பட்டுள்ள நியோ டைடல் பூங்காக்களினால் தமிழ்நாட்டின் வளர்ச்சிச் சரிதம் பல்கிப் பெருகிறது.

நமது திராவிட மாடல் ஆட்சியில் மாநிலமெங்கும் தொடங்கப்பட்டுள்ள டைடல் பூங்காக்கள் ஆயிரக் கணக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கி, அனைவரையும் உள்ளடக்கிய சமத்துவமான வளர்ச்சியை முன்னெடுத்து வருகிறது. வேலூர், திருப்பூர், காரைக்குடி என அடுத்து தொடங்கப்படவுள்ள டைடல் பூங்காக்கள் மேலும் வாய்ப்புகளை விரிவடையச் செய்யும்.

இவ்வாறு, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



வடலூரில் நடைபெற்ற ஆதிதிராவிடர் நலக்குழுவின் வடக்கு மண்டல ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் உரையாற்றினார். அமைச்சர்கள் சி.வெ.கணேசன், கோவி.செழியன், ம.மதிவேந்தன் மற்றும் துணைப் பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ் ஆகியோர் சிறப்புரையாற்றினர். ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. தலைமை வகித்தார்.



மாநில ஆதிதிராவிடர் நலக்குழு அணி சார்பில் திருச்சி மண்டல அளவிலான ஆலோசனை மற்றும் ஆய்வுக் கூட்டம் பெரம்பலூரில் நடைபெற்றது. கழக துணைப் பொதுச் செயலாளர், மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா எம்.பி., அமைச்சர்கள் சா.சி.சிவசங்கர், டாக்டர் மா.மதிவேந்தன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ. அந்தியூர் பி.செல்வராஜ் எம்.பி., மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி மற்றும் ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாசிகளுடன், கரூர் மாவட்டம் ஆண்டாங்கோவில் மேற்கு ஊராட்சி கோவிந்தம்பாளையம் ரூபி கார்டனில், ரூ 4.50 லட்சம் மதிப்பில் கழிவு நீர் வடிகால் அமைத்திடும் பணிக்கு மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்வில், கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.